2nd Term Exam NEW
பதிப்புரிமை ஆசிரியருக்கே/Copyright to Editor

ஆசிரியர்: ஏ.கஜன் B.A-Tam (Cont..)
TP: 077 2400 707

தமிழ்வழி பரீட்சைகள்

# இரண்டாம் தவணைப் பரீட்சை

தரம் 07

தமிழ் மொழியும் இலக்கியமும் I, II
Tamil Language and Literature I, II

இரண்டு மணித்தியாலம்
Two hours

A/L Geography | ACCOUNTING WORLD 2 ஆம் குறுக்கு வீதி, மல்லாவி | இனிது கல்வி நிலையம் பாலிநகர், வவுனிக்குளம் | Personal & Group Class 6-11 - TAMIL A/L - GEOGRAPHY

தமிழ்வழி கற்றலுக்கான ஒளி

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

பரீட்சைத் தொடர் Examination Series 4

**கவனிக்க:**
* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ் வினாத்தாளுக்குரிய **புள்ளிகள் 100** ஆகும்.
* 1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.
* அறிவுறுத்தல்களுக்கு அமைவாக பகுதி II இலுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக. ..............................

- **பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

**1.** "அவரது பேச்சில் நியாயமிருந்தது" – இங்கு **நியாயம்** என்பதன் **எதிர்ச்சொல்**
1. நேர்மை 2. அநியாயம் 3. அனியாயம் 4. ஆதரவு

**2.** "துன்பம் கண்ட போதிலே துறந்து போதல் இல்லையே!" – இங்கு **துன்பம்** என்பதன் ஒத்தசொல்
1. துயரம் 2. இன்பம் 3. மகிழ்ச்சி 4. ஆரவாரம்

**3.** "பாங்கி, விவரிக்கலாம்." – இங்கு **பாங்கி** என்பது
1. தோழி 2. கண்ணகி 3. நண்பன் 4. ஆடவர்

**4.** "வேடன் மானை வேட்டையாடினான்" – இங்கு **வேடன்** என்பதன் **பெண்பாற்சொல்**
1. வேடி 2. வேடுவி 3. வேடுவிச்சி 4. வேடுச்சி

**5.** "வையத்தில் வாழ்வாங்கு வாழ்வோமாக" – இங்கு **வையம்** என்பதன் **ஒத்தசொல்**
1. கோள் 2. உலகம் 3. கானகம் 4. வீடு

**6.** மாடு கத்தும் என்பது போல, **எருது**
1. கத்தும் 2. முக்காரமிடும் 3. உறுமும் 4. அழும்

**7.** "கம்பியூட்டர் (*Computer*) பாவனை தற்காலத்தில் வெகுவாக அதிகரித்து வருகின்றது" – இங்கு **கம்பியூட்டர்** என்பதன் தமிழ்வடிவம்
1. தொலைபேசி 2. கணனி 3. இணையம் 4. தொலைக்காட்சி

**8.** ஒருவரின் உடமைகளை அபகரித்தல்
1. கொள்ளை 2. கொடை 3. கொள்கை 4. உதவி

**9.** அவர்கள் வந்தார்கள் – இங்கு **அவர்கள்** என்பது
1. பன்மைப்பெயர் 2. தன்மைப்பெயர் 3. படர்க்கைப் பன்மை 4. முன்னிலைப் பன்மை

**10.** ஆகா! என்ன அழகு – இத்தொடரில் இடம்பெற்றுள்ள **நிறுத்தற்குறியீடு**
1. வினாக்குறி 2. வியப்புக்குறி 3. மேற்கோட்குறி 4. அடைப்புக்குறி

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

11. "பாரதியார் சிறந்த புலவர்" – இங்கு இடம்பெற்றுள்ள **பயனிலை**
1. சிறந்த 2. பயனிலை இல்லை 3. பாரதியார் 4. புலவர்

12. "தாகத்திலிருந்த தம்பி நீரை மட மடவென அருந்தினான்" – இங்கு **மட மட** என்பது
1. இரட்டைக்கிளவி 2. இணைமொழி 3. அடுக்குமொழி 4. அடுக்கிடுக்குமொழி

13. கடவுள் இல்லை என வாதிடுபவன்
1. ஞானி 2. நாத்திகன் 3. துறவி 4. ஆத்திகன்

14. "மிகக் கவனமாகப் பாதுகாத்தல்" – என்ற பொருள்தரும் **உவமைத்தொடர்**
1. எலியும் பூனையும் போல 2. கண்ணை இமை காப்பது போல
3. அடியற்ற மரம் போல 4. கலங்கரை விளக்குப்போல்

15. **ஐம்பதாவது ஆண்டு** நிறைவில் கொண்டாடப்படும் விழா
1. வெள்ளிவிழா 2. பொன்விழா 3. வைரவிழா 4. நூற்றாண்டுவிழா

16. பின்வருவனவற்றுள் உயர்திணையாக **அமைவது**
1. மரம் 2. மான் 3. பறவை 4. மனிதன்

17. "தாத்தா பாக்குடன் ...................... போட்டார்"
1. வெற்றிலை 2. வெத்திலை 3. வெற்றிலை 4. வெற்றிளை

18. **மெய்யெழுத்து**க்களின் எண்ணிக்கை
1. 216 2. 18 3. 30 4. 12

19. "தம்பி குப்பைகளை எரித்தான்" – இது எவ்வகை வாக்கியம்?
1. தனிவாக்கியம் 2. கூட்டு வாக்கியம் 3. கலப்புவாக்கியம் 4.தொடர் வாக்கியம்

20. **கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**
(அ) இறந்தாலும் உலகில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்.
(ஆ) அவர் பல பாடல்களை எழுதியுள்ளார்.
(இ) அவர் எட்டயபுரத்தில் பிறந்தார்.
(ஈ) அனைத்துப் பாடல்களும் இன்னும் நிலைத்து நிற்கின்றன.
(உ) பாரதியார் சிறந்த கவிஞர்.
1. உ, ஆ, இ, ஈ, அ 2. ஆ, ஈ, ஆ, இ, உ
3. உ, அ, ஆ, இ, ஈ 4. உ, இ, ஆ, ஈ, அ

**(20 X 2 = 40 புள்ளிகள்)**

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

# தமிழ் மொழியும் இலக்கியமும் II

**01. பின்வரும் பாடலை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.**

கொண்டையிலே இரத்தந் தோய்ந்த
கூரிய வாளொன் றுண்டு
கண்டத்தி லிரண்டு கத்தி
கட்டியே தூங்கு மம்மா
சண்டைசெய் வீரன் போலச்
சட சட வென்றடித்து
விண்டது பெரிய சத்தம்
மெய்ம்மறந் தறிவு சோர்ந்தேன்.

(1) இப் பாடலில் கூறப்படும் **பறவை** எது?
(2) மேலே நீர் குறிப்பிட்ட பறவையின் **இயல்பு**களாகக் குறிப்பிடப்படுவன யாவை?
(3) இப் பாடலில் இடம்பெறும் **இரட்டைக்கிழவி**ச் சொல் யாது??
(4) மெய்மறந்து சோர்ந்தமைக்கான **காரணம்** யாது?
(5) பின்வருவனவற்றுககு **ஒத்தகருத்து**ச் சொல் தருக.
(1) இரத்தம் (2) சத்தம் **(10 புள்ளிகள்)**

**02. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

(அ) நான் விரும்பும் பாடசாலை
(ஆ) நான் கண்டு இரசித்த மழைநாள்
(இ) சூழலைப் பேணுவோம்
(ஈ) உடைந்த குயின் சுயசரிதை **(15 புள்ளிகள்)**

**03. பின்வருவனவற்றுள் ஏதாவது ஒன்றினைத் தெரிவு செய்து ஏறக்குயை 50 - 75 சொற்களுக்குள் அமையுமாறு எழுதுக.**

நீர் சென்ற கல்விச் சுற்றுலா தொடர்பில் வெளிநாட்டிலுள்ள உமது தந்தைக்க ஒரு கடிதம்

**அல்லது**

எதிர்பாராத விபத்து ஒன்றின் போது தனது தந்தையை இழந்த உமது நண்பன் **அல்லது** நண்பிக்கு அனுதாபம் தெரிவித்தும் ஆறுதல் தெரிவித்தும் ஒரு **கடிதம்** **(10 புள்ளிகள்)**

**04. பின்வரும் கூற்றுக்கள் யாரால் யாருக்குக் கூறப்பட்டது என்பதை எழுதுக.**

1) “நன்று! கள்வனைக் கொல்லுதல் நீதி தானே”
2) “அண்ணன்மார்களே இதனை விட்டுப் போகவே எனக்கும் உதவி செய்யுங்கள்” **(04 புள்ளிகள்)**

**05. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

1) செய்தித்தாளின் பயன்கள் **நான்கு** தருக.
2) **கற்றதொழுகு** – என்பதன் **பொருள்** யாது?
3) சேவல் பூனைக்குக் கூறிய அறிவுரை யாது?
4) கும்மி எவ்வாறு ஆடப்படும்?
5) பாண்டிமாதேவி கண்ட **கனவு** யாது? **(10 புள்ளிகள்)**

**06. பின்வரும் தொடர்களின் அல்லது சொற்களின் பொருள் புலப்படும் வகையில் வாக்கியம் அமைக்குக.**

(1) குலுங்கிக் குலுங்கி

(2) கட கட

(3) பென்னம் பெரிய **(06 புள்ளிகள்)**

**07. பொருள் தருக.**

(1) எழுமை எழு பிறப்பும் உள்ளுவர் தம்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு

(2) காலத்தினால் செய்த நன்றி சிறிதுஎனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது **(05 புள்ளிகள்)**

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk